**ஆன்லைனில் வாகன புகை சான்று உத்திரவுக்கு காலஅவகாசம் வழங்க போக்குவரத்து துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு ….**




வாகனங்களின் வெளியிடும் புகை அளவு அதிகமாகும்போது மனிதர்களுக்கு தோல் நோய் மற்றும் சுவாச கோளாறு மற்றும் புற்று நோய் உருவாவதற்கும் ஓசேன் படலம் ஓட்டை விழுவதற்கும் பூமி வெப்பம் அதிகரித்தல் ஆகியவற்றிற்கு வகனங்களில் இருந்து வெளியேரும் வாயுக்கள் தான் காரணம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.. இத்தகைய மாசுவை கட்டுபடுத்த உலகம் முழுவதும் போராடி வருகின்றனர் மாசுவை தடுக்க பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இது ஒரு புறம் இருக்க

வாகனங்கள் வெளியிடும் புகையை ஆய்வு செய்து புகை சான்று வழங்கும் மையங்கள் போக்குவரத்து ஆணையர் அலுவலக கட்டுபாட்டில் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டு தமிழகத்தில் சுமார் 350 மையங்கள் இயங்கிவருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது **உச்சநீதிமன்றம் M.C.மேத்தா எதிர் யூனியன் ஆப் இந்தியா** வழக்கில் மாசு கட்டுபடுத்த பல்வேறு நடைமுறை விதிகளை உருவாக்கி மத்திய அரசுக்கு உத்திரவிட்டது. அதன் அடிப்படையில் **ஆன்லைனில் ஆய்வு செய்து புகை சான்று வழங்க வேண்டுமெனவும் உத்திரவிட்டது. ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் ஆன்லைனில் புகை சான்று வழங்கப்படும்** என திடீரென தமிழ்நாடு போக்குவரத்து துறை உத்திரவு பிறப்பித்ததால் வாகன புகை பரிசோதனை மையங்கள் சங்கம் மூலம் புதிய கருவி வாங்க கணினி மேம்படுத்த கால அவகாசம் கோரப்பட்டது. ஆனால் போக்குவரத்து ஆணையர் அவர்கள் அவகாசம் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது இந்தியாவில் மற்ற 28 மாநிலங்களில் இன்னும் முழுமையாக அமுல்படுத்தவில்லை எனவும், வாகன் மென்பொருள் முழுமையாக பயன்படுத்தமுடியவில்லை எனவும். இதனால் கடந்த இரண்டு வாரம் தமிழகம் முழுவதும் தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள் இயங்கவில்லை.

இந்நிலையில் புகை பரிசோதனை இயந்திரங்கள் மற்றும் கணினி மென்பொருள் மேம்படுத்த ஆன்லைனில் வாகன புகை சான்று உத்திரவுக்கு கால அவகாசம் கோரி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்கள் உரிமையாளர்கள் சங்கம் அதன் தலைவர் ராமகிருஷ்ணன் சார்பாக வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கு இன்று **24-04-2019** விசாரணைக்கு **மாண்புமிகு. நீதியரசர் D.கிருஷ்ணகுமார்**

அவர்கள் முன்னிலையில் வந்தது. மனுதாரர் தரப்பில் புகை பரிசோதனை மையங்களின் பரிசோதனை கருவி மேம்படுத்த, உரிமையாளர்கள், பரிசோதனையாளர்களின் வாழ்வாதாரம் கருதி கால அவகாசம் வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. அரசு தரப்பில் எவ்வளவு நாள் கால அவகாசம் எனபது பற்றி போக்குவரத்து ஆணையர் அவர்களிடம் ஆலோசித்து வரும் **29-04-2019** திங்களன்று நீதிமன்றத்தில் தெரிவிப்பதாகவும் **கூடுதல் அரசு வழக்கறிஞர் A.N.தம்பிதுரை** கோரிக்கை வைத்தார்.

**மாண்புமிகு.நீதியரசர் D.கிருஷ்ணகுமார்** அவர்கள் ஆன்லைனில் புகை சான்று கால அவகாசம் கோரிக்கை வழக்கு திங்கள் **29-04-2019** அன்று விசாரணைக்கு எடுக்க உத்திரவிட்டார் என சீனியர் வழக்கறிஞர் பூர்ணிமா மற்றும் வழக்கறிஞர்கள் ஜெ.ஜெயேந்திரகிருஷ்ணன் எஸ்.சுரேஷ்குமார்ர் தெரிவித்தனர்.